**செய்தி வெளியீடு எண்: 529** **நாள்:26.08.2019**

**<u>இன்று (26.8.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட "கல்வித் தொலைக்காட்சி"யை சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் துவக்கி வைத்து ஆற்றிய உரை</u>**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

எழுச்சியான இந்த நிகழ்ச்சியில் மிகச் சிறப்பாக அற்புதமாக உரையாற்றி
அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்
**திரு. ப.தனபால் அவர்களே!**

முன்னிலை உரையாற்றிய அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
**திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!**

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு மீன்வளம்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை அமைச்சர்
**திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
**திரு. உடுமலை ராதாகிருஷ்ணன் அவர்களே!**

மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும்
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்
**திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்களே!**

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர்
**திருமதி. பா.வளர்மதி அவர்களே!**

வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர்
**திரு. க.சண்முகம் அவர்களே!**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!
மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள
பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர்
**திரு. பிரதீப் யாதவ்அவர்களே!**

கல்விக் கண்ணின் ஊற்றாக விளங்கும் ஆசிரியப் பெருமக்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!
நாளைய உலகை ஆளவிருக்கின்ற மாணவச் செல்வங்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

'**கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு**' என்றார் நமது தமிழ் மூதாட்டி ஔவையார். மனிதனது வாழ்க்கை அவன் கல்வியை கற்பதன் மூலமே முழுமை பெறுகிறது. பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது கற்றாலும், ஒருவனால் கல்வியில் முழுமை அடைய முடியாது.

நம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்கி அறிவை விரிவாக்குகிறது கல்வி. இந்தக் கல்வியானது, அறம், பொருள், இன்பம் போன்ற அனைத்து வகைப் பயன்களையும் நமக்குத் தருகிறது. கல்வி கற்றவர்கள் இந்த பயன்களைப் பெறுவதுடன், உலகில் நல்ல புகழையும் அடைவார்கள். மேலும், "கவலை ஏற்படும்போது அந்த கவலையிலிருந்து மீள்வதற்கு உரிய வழியையும் கல்வி தரும்'' என்று குமரகுருபரர் கூறியுள்ளார். எனவே, மனிதனுக்கு கல்வியைத் தவிர வேறு எதுவுமே சிறந்த துணையாக இருக்க முடியாது.

**''கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக''**

கற்கத் தகுந்த நூல்களை குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். பிறகு கற்ற அறிவிற்கு தக்கபடி அவற்றை பின்பற்றி நடக்க வேண்டும் என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இந்த அறிவுரையை கல்வி கற்கும் அனைவரும் பின்பற்ற வேண்டும்.

அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில் அனைவருக்கும் தங்கு தடையின்றி, தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். சிறப்பான கல்வி அளிப்பதாலும்; மக்களின் உடல் நலம் பேணி பாதுகாக்கப்படுவதாலும்; மனிதவளம் மேம்பாடு அடையும். மனித வளம் மேம்பட்டால் அந்த மாநிலத்தின் வளர்ச்சி சீராக இருக்கும்.

**"கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதே எனது கோட்பாடாகவும் எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது"** என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

"**சொன்னதைச் செய்வேன், செய்வதைத்தான் சொல்வேன்**" என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, தமிழ்நாட்டில் கல்வித் துறையில் அவர் செயல்படுத்திய திட்டங்களின் மூலம் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் கல்வித் துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளி வசதி கிடைத்திட சிறப்பு முன்னுரிமை வழங்கி, கடந்த 8 ஆண்டுகளில் 248 புதிய தொடக்கப் பள்ளிகளை அரசு தொடங்கியுள்ளதுடன், 117 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியுள்ளது.
- 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- **"கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே" –** அதாவது பிறரிடமிருந்து உதவி பெற்றாவது கல்வி கற்க வேண்டும் என்கிறது நறுந்தொகை நூல். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ, கல்விக்கான அனைத்து செலவினத்தையும் அரசே மேற்கொள்ளும் வகையில் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள். கட்டணமில்லாக் கல்வி, மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினி, சீருடை, காலணி, புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி, புவியியல் வரைபட புத்தகம், கம்பளிச் சட்டை, மழைக்கால ஆடை, உறைக் காலணி, காலுறைகள், பேருந்து பயண

அட்டை மற்றும் மிதிவண்டிகள் போன்றவற்றை வழங்கி, மாணாக்கர்கள் கல்வியை தொடர்வதற்கான அனைத்து அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்தார்கள்.

- மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித் துறையில் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கையும், இடைநிற்றல் விகிதமும் பெருமளவில் குறைந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று பல பள்ளிகளை துவங்கியதினால் மாணவர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்து, இந்தியாவிலேயே உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
- கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.
- வேகமாக மாறிவரும் கற்றல் சூழ்நிலையில் தகவல் தொழில்நுட்ப செயல் திறனை பள்ளிகளில் இணைப்பது இன்றியமையாததாக உள்ளது. இதற்கென 520 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதிகள் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.
- அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அதாவது Smart Classes ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.
- 2018–19–ஆம் ஆண்டில் 277 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு பயன் பெறும் வகையில் மாநிலம் முழுவதும் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த எட்டு ஆண்டுகளில் இதுவரை 6 ஆயிரத்து 613 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 46 லட்சத்து 42 ஆயிரத்து 469 எண்ணிக்கையிலான மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுத் தேவைக்காக, 29 ஆயிரத்து 891 மடிக்கணினிகளை வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கென 37 கோடியே 86 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது போன்று பள்ளிக் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு எண்ணிடலங்கா சாதனைகளை புரிந்துள்ளது.

இந்த சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில் “பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும் **புதிய தொலைக் காட்சி அலைவரிசை தொடங்கப்படும்**” என மாண்புமிகு அம்மாவின் அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பிற்கிணங்க, கல்வித் தொலைக்காட்சி தனது அலைவரிசையை தொடங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக கல்வித் துறை அதிகாரிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அடுத்தபடியாக, தொழில்நுட்பப் பணி மற்றும் தொலைக்காட்சிக்கான முன் தயாரிப்பு காட்சிகளை பதிவு செய்ய தனியாக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுக்களின் அயராத உழைப்பின் காரணமாக, குறுகிய காலத்திலேயே, இந்தத் தொலைக்காட்சி தனது நிகழ்ச்சிகளை இன்று முதல் தொடங்கியுள்ளது. இதனை நிகழ்த்திக் காட்டிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொலைக்காட்சிக்கான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய அதிநவீன கேமராக்கள், தொழில்நுட்ப கருவிகள், ஆளில்லா பறக்கும் கண்காணிப்பு கேமரா போன்ற பல்வேறு தொழில்நுட்ப கருவிகள் வாங்குவதற்கென ஒரு கோடியே 35 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன.

கல்வித் தொலைக்காட்சி அரசு கேபிளில் 200வது அலைவரிசையில் ஒளிபரப்பாகும். இந்த அலைவரிசை 24 மணி நேரமும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்பு செய்யும்.

வணிக நோக்கில் செயல்படும் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுடன் போட்டி போடும் வகையில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு பயன்படும் வகையில் போட்டித் தேர்வுக்கான பயிற்சிகள், படைப்பாற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள், மாணவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு சொல்லும் நிபுணர்களின் பதில்கள், பள்ளிக் கல்வித் துறையின் அறிவிப்புகள், புதுமையான முறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேர்காணல், அரசுப் பள்ளி மாணவர்களின் கண்டுபிடிப்புகள், கல்வியாளர்களின் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் இடம் பெறும்.

பொதுவாக, மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல், வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதை பெற்றோர்கள் விரும்புவதில்லை. எனவே, அவ்வப்போது வீட்டில் தொலைக்காட்சி பார்க்கும் மாணவர்களை படிப்பில் கவனம் செலுத்துமாறு பெற்றோர்கள் அறிவுறுத்திக் கொண்டே இருப்பார்கள். ஆனால், இந்த கல்வித் தொலைக்காட்சி தொடங்கப்பட்டதன் காரணமாக, மாணவர்கள் தங்கள் படிப்புக்கு உதவும் செய்திகளையும், தகவல்களையும் தொலைக்காட்சி மூலமாகவும் கண்டு பயன்படுத்திக் கொள்ள முடியும். இனி மாணவர்கள் கல்வி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதை பெற்றோர்களும் ஊக்கப்படுத்துவார்கள். எனவே, கல்வித் தொலைக்காட்சி அலைவரிசையை மாணாக்கர்கள் பார்த்து, அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியப் பெருமக்களும், உங்கள் பெற்றோர்களும் உங்களுக்கு நல்ல வழிகளை காட்டுபவர்கள். தற்போதுள்ள சூழ்நிலையில், மாணாக்கர்கள் பல்வேறு தேவையற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செல்போன்கள், சமூக ஊடகங்கள் போன்றவற்றில் தங்கள் நேரத்தை செலவிடாமல், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பயனுள்ள நிகழ்ச்சிகளைக் கண்டு வாழ்க்கையில் உயர்வு பெற வேண்டும். இதன்மூலம் அறிவுசார்ந்த தமிழ் சமுதாயத்தை உருவாக்கிட முடியும். படிக்கும்பொழுதே, மருத்துவர், பொறியாளர், விளையாட்டு வீரர், ஆசிரியர், மத்திய அரசு நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றிபெற்று ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், இந்திய இராணுவத்தில்

பணியாற்றல், தொழில் முதலீட்டாளராதல், வங்கிப் பணியில் அமர்தல் என்று, எதிர்காலத்தில் அடைய வேண்டிய உயரிய குறிக்கோள்களை நாம் சிறு வயதிலேயே கொண்டிருக்க வேண்டும். இதனால் படிக்கும் காலங்களில் முழு கவனம் செலுத்தி நமது குறிக்கோளை எய்திட வேண்டும். ஆசியர்கள் அன்றாடம் நடத்தும் பாடங்களை அன்றைய தினமே படித்தால் தேர்வினை மிக எளிதாக எழுதி, அதிக மதிப்பெண்களை பெறமுடியும். நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்க வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கலாம். சுவரை வைத்துத்தான் சித்திரம் என்பார்கள், எனவே, படிப்பு மட்டுமன்றி, சிறந்த ஆரோக்கியமான தேகம் நமக்குத் தேவை. எனவே, உடற்பயிற்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்கள் பள்ளியில் உள்ள நேரங்களில், பள்ளிகளில் நடைபெற்ற போட்டிகள், திறன்வளர்ப்பு குறித்த பயிற்சிகள், பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சிகள் போன்றவை இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ள கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பில் இடம் பெறும். இதனை மாணாக்கர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், கல்வித் தொலைக்காட்சி தொடங்கப்படுவதன் மூலம், கல்வித் துறை சார்ந்த அரசின் அனைத்து செயல்பாடுகளையும், மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள இயலும். மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும், இந்த புதிய கல்வித் தொலைக்காட்சியினை முழுமையான அளவு பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கல்வி தொலைக்காட்சியை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருந்த பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், செல்வத்துள் செல்வம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். பிற செல்வங்களெல்லாம் எந்தவொரு சூழ்நிலையிலாவது அழிந்துவிடும். ஆனால், நம் உயிர் இருக்கும் வரை நம்மோடு இருக்கும் ஒரே செல்வம் கல்விச் செல்வம். கல்வி கற்போருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கல்வி

மேலும் சிறக்க கல்வித் தொலைக்காட்சியை மாணாக்கர்களுக்கு அரசு அர்ப்பணித்திருக்கிறது. பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்குக் கல்வி கற்பது சாதாரண விஷயம் அல்ல. தற்போது நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறுபவர்கள் பலர் உண்டு. நாங்கள் படித்த காலம் வேறு, நீங்கள் படிக்கின்ற காலம் வேறு. இன்றைய காலகட்டத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அறிவுசார்ந்த இந்த தொலைகாட்சியை உங்களுக்கு அர்ப்பணித்திருக்கின்றோம். இதனை நல்லமுறையில் பயன்படுத்தி மாணாக்கர்கள் எதிர்காலம் மென்மேலும் சிறப்படைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**